

சென்னை கிழக்கு மாவட்டம் மாணவர் அணி சார்பில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் எழும்பூர் தொகுதியில் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் எஸ். பாலாஜி தலைமையில் நடைபெற்றது. இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில், கழக பேச்சாளர் செந்தலை கௌதமன், செங்கை தாமஸ் ஆகியோர் வீரவணக்க உரையாற்றினார். இதில் மேயர் பிரியா ராஜன், மாவட்ட அவை தலைவர் கோ.ஏகப்பன், பகுதி செயலாளர் வி.சுதாகர், சோ.வேலு, கூ.பீ. ஜெயின் மற்றும் மாவட்ட துணைச் செயலாளர் புனிதவதி எத்திராசன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், வானவில் விஜய் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டார். வட்ட செயலாளர் இ. மொய்தீன் நன்றியுரை உரையாற்றினார்.



கரூர் மாவட்ட மாணவரணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் கரூர் உழவர் சந்தை எதிரில் நடைபெற்றது. கழக சட்ட திட்ட திருத்த குழுச் செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி., மாவட்டச் செயலாளர், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி சிறப்புரையாற்றினர். எம்.எல்.ஏ.க்கள் இரா.மாணிக்கம், பி.ஆர்.இளங்கோ, க.சிவகாமசுந்தரி, நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், மாநகரச் செயலாளர் எஸ்.பி.கனகராஜ், மாவட்ட நிர்வாகிகள் டி.ராஜேந்திரன், எம்.எஸ்.கே.கருணாநிதி, பூவே ரமேஷ்பாபு, மகேஸ்வரி சுப்பிரமணியன், பி.வி.பாரத், மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஆர்.ஜி. சரவணமூர்த்தி, சுப.ராஜகோபால், குளித்தலை சிவராமன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### குவைத் நாட்டில் புகையின் காரணமாக

# மூச்சுத் திணறி உயிரிழந்த இருவரின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜன.27-

குவைத் நாட்டில் புகையின் காரணமாக மூச்சுத் திணறல் ஏற்பட்டு உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு

கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், மங்கலம் பேட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு.முகமது யாசின் த/பெ.பிச்சைக்கனி மற்றும் திரு.முகமது ஜுனைத் த/பெ.அப்துல் கலாம் ஆகிய இருவரும் குவைத் நாட்டில் ஓட்டுநர்களாக பணியாற்றி வந்த நிலையில், கடந்த 19.1.2025 அன்று காலையில் மேற்படி இருவரும் தங்கியிருந்த அறையில் கடும் குளிரிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள தீ மூட்டியதாகவும், நீண்ட இரவின் காரணமாக தீயை அணைக்காமல் அப்படியே உறங்கியதால் நெருப்புப் அணைந்து ஏற்பட்ட புகையினால் மூச்சுத் தினறல் ஏற்பட்டு இறந்துள்ளனர் என்றும், மேற்படி இருவரின் உடல்களை கடந்த 22.1.2025 அன்று குவைத் நாட்டிலேயே உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ளது என்று துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த இருவரின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் தலா ஐந்து இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

### தமிழ்நாடு முழுவதும்

# பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம் - 88 சதவீதம் நிறைவு!

## கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சென்னை, ஜன.27

முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு துவக்கி வைக்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம் தமிழ்நாடு முழுவதும் 25.01.2025 வரை 88 சதவீதம் நிறைவுபெற்றுள்ளது என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

"தமிழர்களின் பழம்பெரும் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பிரதிபலிக்கும் விழாவாகப் பொங்கல் பண்டிகை தமிழ்நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாள் அறுவடைத் திருவிழாவாகவும், இயற்கைக்கும், உழவர் பெருங்குடி மக்களுக்கும் அவர் தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாகவும் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

2025-ஆம் ஆண்டு தைப் பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக்கரும்பு வழங்கப்படும்" எனவும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள இலவச வேட்டி-சேலைகள் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் சேர்த்து வழங்கப்படும் எனவும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அதன்படி, கடந்த 09.01.2025 அன்று சென்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் சின்னமலை வேளச்சேரி பிரதான சாலையில் இயங்கிவரும் சைதாப்பேட்டை - 11 நியாய விலைக் கடையில் முதலமைச்சர் அவர்கள் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கி அந்தத் திட்டத்தினைத் துவக்கி வைத்தார்.

இதன் மூலம், தமிழ்நாடு முழுவதும் 34,793 நியாயவிலைக்கடைகளில் 2 கோடியே 20 லட்சத்து 94 ஆயிரத்து 585 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி



முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

இதற்காக சுமார் 50,000 கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

அதன்படி, 25.01.2025 வரை தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 94 லட்சத்து 15 ஆயிரத்து 346 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது என கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.



காஞ்சிபுரம் மாநகர அலுவலகத்தில் மொழிப்போர் தியாகிகளுக்கு மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன் தலைமையில் வீரவணக்கம் செலுத்தப்பட்டது. உடன் மொழிப்போர் தியாகி ஆ.சுப்பிரமணியன், மாவட்ட பொருளாளர்சன் பிராண்டு கே.ஆறுமுகம், மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி எஸ். ராமகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர் குமார், பகுதி செயலாளர்கள் எஸ்.சந்துரு. கே.திலகர், தசரதன், சு. வெங்கடேசன், மாநகரநிர்வாகிகள் கே ஏ.செங்குட்டுவன், ஜெகநாதன், நிர்மலா, கே.சுப்பராயன், மாவட்ட மகளிர் அணி ஆ.செல்வி மாநகர இளைஞரணி அமைப்பாளர் ப. சுகுமார். உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு முதலமைச்சர் மகளிர்களுக்கு தாய் வீட்டுச் சீதனம் போல்

# பல்வேறு நலத் திட்டங்கள் அறிவித்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேச்சு.!

திருவள்ளூர் ஜன 27;

குடியரசு தினத்தை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட திருமணம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம் நடைபெற்றது இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபு சங்கர் தலைமை வகித்தார் , பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி முன்னிலை வகித்தார் இந்த கிராம சபை கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் அயல்நாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்பு அழைப்பாளராக அமைச்சர் சா.மு.நாசர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார் இதில் அமைச்சர் தெரிவிக்கையில்,

இந்திய குடியரசு தினமானது கிராம சபை நிகழ்விவுகளில் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன், கடந்த காலங்களில் வருடத்திற்கு நான்கு முறை நடைபெற்று வந்த கிராம சபை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன் பொதுமக்களிடையே குறைகளை தீர்வு காணும் வகையில் வருடத்திற்கு ஆறு தடவை என்று அறிவித்தது மட்டும் அல்லாமல் . தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மதுரை அருகே உள்ள குக்கிராமான பாப்பம் பட்டியில் நடைபெற்ற கிராம சபையில் கலந்து கொண்டார். இதுமட்டுமல்லாமல் பொதுமக்களாகிய நீங்கள் கூறும் நிறை குறைகளை கேட்டு இக்கூட்டத்தில் பகிர்ந்து அதை நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திக் கொடுப்பதுதான் இந்த கிராம சபை கூட்டம். அதன்அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் 12,524 கிராம சபை கூட்டம் நடைபெற்று வருகிறது இந்த கிராம சபையில் நீங்கள் நடைபாதை வகுப்பறை கூடுதல் கட்டடம், சாலைகளில் வேகதடை அமைத்தல், சமுதாய கூடம் அமைத்தல், போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து உள்ளீர்கள் அதனை விரைவில் நிறைவேற்று தரப்படும். மேலும், நமது பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் தனது தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து கூடுதல் வகுப்பறை கட்டுவதற்கான ரூ.25 இலட்சம் வழங்குவதாக கூறியுள்ளார். விடியல் பயணம் திட்டத்தில் 420 கோடி முறை மகளிர்கள் பயணம் செய்துள்ளார்கள், தாய் வீட்டு சீதனம் போல் மாதந்தோறும் ரூ.1000 மகளிர் உரிமைத் தொகையும், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வங்கி கடன் தள்ளுபடி போன்ற நல்லத் திட்டங்களை அறிவித்தது மட்டுமல்லாமல் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள் என சிறுபான்மையினர் நலன் மற்றும் அயல்நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்துள்ளார்கள்.



முன்னதாக ஒவ்வொரு துறைகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்கினை மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் அயல்நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் திரு சா.மு.நாசர் அவர்கள் பார்வையிட்டார்கள். தொடர்ந்து ஸ்பர்ஷ் தொழுநோய் விழிப்புணர்வு உறுதி மொழியினை சிறுபான்மை யினர் நலன் மற்றும் அயல்நாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஏற்றுகொள்ள அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஏற்றுகொண்டார்கள்.

இந்த கிராம சபை கூட்டத்தில் பங்கேற்ற பொது மக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்

இந்நிகழ்வில் பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றிய செயலாளர் கொத்தியாபக்கம் டி. தேசிங்கு, கிழக்கு ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ், திட்ட இயக்குனர் வை .ஜெயக்குமார், உதவி இயக்குனர் விக்னேஷ்வரன், பூவிருந்தவல்லி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வெங்கடேஷ் ராஜேந்திரன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ்கு மார், ஒன்றிய நிர்வாகிகள் ஜெ. சாக்ரடீஸ், இ. கந்தபாபு, சி.அண்ணாகுமார், ஜி.சுகுமாரன், கட்டதொட்டி குணசேகரன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி ராஜேஷ், ஜி.பிரவின்குமார், இ.வி.பி.பிரதீப், டி.மணி வண்ணன், உதயகுமார், அரி, கார்த்திகேயன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பஞ்சாப் - அரியானா மாநிலங்களில் டிராக்டர் பேரணி!

சண்டிகர், ஜன.27-

வேளாண் பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை சட்டபூர்வமாக்குவது உள்ளிட்ட 13 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த ஆண்டு முதல் விவசாயிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இதனிடையே போராட்டத்தை தீவிரப்படுத்தும் விதமாக குடியரசு தினமான இன்று டிராக்டர் பேரணி திட்டமிட்டபடி நடைபெறும் என்று விவசாய சங்க தலைவர் சர்வான் சிங் பாந்தர் அறிவித்தார். அதன்படி, பஞ்சாப், ஹரியானா மாநிலங்களில் நடைபெற்ற போராட்டத்தில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட டிராக்டர்களுடன் விவசாயிகள் கலந்து கொண்டனர். அம்மாநிலங்களில் உள்ள பா.ஜ.க. அலுவலகங்கள், வணிக வளாகங்கள் முன்பு டிராக்டர்கள் நிறுத்தி வைக்கப்படும் என்றும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.



வடசென்னை தமிழ் இளைஞர் கழகம் சார்பில் கழக வர்த்தக அணி இணைச் செயலாளர், நேசம் மனித வள மேம்பாட்டு மையத்தின் நிறுவனர் தலைவர் பி.டி. பாண்டிச் செல்வத்துக்கு உயர் நீதிமன்ற நீதி அரசர் நக்கீரர் அதியமான் விருதினை வழங்கினார். வடசென்னை தமிழ் இளைஞர் கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

### குடியரசு தின விழா:

# ரிப்பன் கட்டட வளாகத்தில் தேசியக் கொடி!

## மேயர் ஆர்.பிரியா ஏற்றினார்!

சென்னை, ஜன.27-

பெருநகர சென்னை மாநகராட்சியில் நேற்று (26.01.2025) குடியரசு தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் மேயர் ஆர்.பிரியா தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, மூவர்ண பலூன்களை விண்ணில் பறக்க விட்டார்.

இதனைத் தொடர்ந்து, மேயர் ஆர்.பிரியா தேசிய மாணவர் படையினர், சாரண, சாரணியரின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக்கொண்டார்.

தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் அலுவலர்களுக்கு ரூ.9.93 கோடி மதிப்பில் 1,320 நவீன டிஜிட்டல் கம்பியில்லா பேசும் கருவிகள் (Modern Digital Walkie Talkie) வழங்குவதன் அடையாளமாக ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், உள்ளிட்ட 20 அலுவலர்களுக்கு மேயர் நவீன டிஜிட்டல் கம்பியில்லா பேசும் கருவிகளை வழங்கினார். இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை பள்ளி மாணவ, மாணவியரின் கண்கவரும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு முறையாக சொத்துவரியினை உரிய காலங்களில் தாமதமில்லாமல் செலுத்தியவர்கள் மற்றும் அதிக சொத்துவரி செலுத்தியவர்களை கௌரவிக்கும் வகையில் சொத்து உரிமையாளர்களுக்கு பாராட்டுக் கடிதங்களை (Letter of Appreciation) மேயர் ஆர். பிரியா வழங்கினார்.

மேலும், 2023-24ஆம் ஆண்டு குடும்ப நலத் திட்டப்பணிகளில் மாவட்ட அளவில் சிறந்த சேவை வழங்கிய மருத்துவம் சார்ந்த அலுவலர்களுக்கு தமிழ்நாடு மாநில குடும்பநல இயக்கத்தின் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும், பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்பாகப் பணியாற்றிய 140 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைப் பாராட்டிச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களையும், அணிவகுப்பு மற்றும் கலைநிகழ்ச்சிகளில் பங்குபெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களையும் மேயர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், கூடுதல் ஆணையாளர்கள் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெயசந்திர பானு ரெட்டி, இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ.விஜயா ராணி, துணை ஆணையாளர்கள் வி. சிவகிருஷ்ணமூர்த்தி, (பணிகள்), ம.பிரதிவிராஜ், எம்.பி.அமித். (தெற்கு வட்டாரம்), கே.ஜெ.பிரவீன் குமார், (மத்திய வட்டாரம்), கட்டா ரவி தேஜா, (வடக்கு வட்டாரம்), மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர்கள் க.தனசேகரன் (கணக்கு), த.விசுவநாதன் (கல்வி), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), திருமதி சர்பஜெயா தாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு (ம) நிதி), மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள். தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## விருகம்பாக்கம் அரங்கநாதன்

### சனவரி 27 (1965)



இந்தித் திணிப்பை தமிழகமே எதிர்த்து மாபெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த காலகட்டத்தில் விருகம்பாக்கம் கழகத் தோழர், 35 வயதே ஆன அரங்கநாதன் மத்திய அரசின் தொலைபேசித் துறையில் பணியாற்றியவர். விருகம்பாக்கம் இளைஞர்களுக்கு திராவிட இயக்க ஏடுகளை வரவழைத்து படிக்கச் செய்வதை தனது கடமையாகக் கொண்டிருந்தார்.

இந்தியை எதிர்க்க பெரும் தியாகம் செய்ய வேண்டுமென ஒருமாத காலமாக தனது சகோதரியிடம் கூறி வந்தவர். திடீரென 27.1.1965 அன்று அதிகாலை இரண்டு மணியளவில் ஓர் மாமரத்தின்கீழ் தன் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி, தீ வைத்துக் கொண்டு, "என் உடலையே தமிழுக்காகவும், இந்தியை எதிர்ப்பதற்காகவும் தியாகம் செய்கிறேன். வாழ்க தமிழ்! ஒழிக இந்தி!" என முழக்கமிட்டவாறே உயிர்த் துறந்த தியாகி.

தலைமைக் கழகம்
தி.மு.க.